மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.229/2013

குருசாமி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. R. நல்லதம்பி
2. N. கலைவாணன்
3. கோபால் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. சங்குபதி
5. வீரராஜ் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 08.08.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில், வழக்கறிஞர் திருமதி.M.செல்வி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.அரசு அவர்கள் ஆஜராகியும், உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.I.K.சதாசிவம் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவின் உத்தேசதரப்பினர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர்/வாதியால், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை, செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.07.2023ம் தேதியன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, அப்பு மற்றும்

அவரது குடும்பத்தினர் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்தாக பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கூறி, அ.வ.எண்.337/2015 என்ற வழக்கின் வழக்குரை, பதிலுரை ஆகியவற்றின் நகல் குறியீடு செய்யப்பட்டது.

(ii) மேற்படி அ.வ.எண்.337/2015 என்ற வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம், பிரிவு 5ன்கீழ் இந்நீதிமன்றத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இந்நிலையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் அப்பு என்பவர் தான் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதால், இவ்வழக்கு நிலுவையில் மேற்படி அப்பு என்பவர் இறந்துவிட்டதால் இவ்வழக்கில் அவரது வாரிசுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவின் 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கு 11 வருடங்கள் விசாரணை நிலுவையிலிருந்து வந்து கடந்த 11.11.2022ம் தேதியில் தான் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அதன்பின்பு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து, மனுதாரர், அப்பு என்பவர் மீது தாக்கல் செய்த அ.வ.எண்.337/2015 என்ற வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், அப்பு தாக்கல் செய்த பதிலுரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

(ii) ஆனால் மேற்படி வழக்கு 12.02.2021ம் தேதியில் மனுதாரரின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது பற்றி மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும், குறுக்கு விசாரணையில் தீர்ப்பு பற்றி தனக்கு தெரியவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். அ.வ.எண்.337/2015ன் தாவா சொத்துவிவரமும், இவ்வழக்கின் சொத்துவிவரமும், தாவா பரிகாரங்களும் ஒன்றே ஆகும். வேண்டுமென்றே மனுதாரர் அ.வ.எண்.337/2015

என்ற வழக்கை நடத்தாமல் தவறுகைக்காக தள்ளுபடி ஆகுமாறு விட்டுவிட்டு வேண்டுமென்றே காலதாமதப்படுத்தி எதிர்மனுதாரர்களை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற நோக்குடன் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல.

(iii) மேலும் அ.வ.எண்.337/2015 வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தற்போது 2 1/2 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கில் அப்புவின் வாரிசுகளை கட்சி சேர்க்க மனுதாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்தவிதமான சட்டதகுதியும் இல்லை. காலவரையறை சட்டப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நாளது வரையில் மனுதாரர் எந்த ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை. கொளத்தூர் கிராம கணக்குகளில் மனுதாரர் பேரில் தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில், இவ்வழக்கில் மனுதாரர் தன் உரிமைமூலத்தை நிரூபிக்காமல் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி செல்லாததாகும்.

(iv) தாவா வழக்குரை ஆவணங்கள் யாதும் மனுதாரரின் வழக்கினையோ, மனுவின் சங்கதிகளையோ நீதிமன்றத்திற்கு நிரூபிக்கும் வகையில் ஏதுமில்லை. எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துள்ளதாக கூறப்படும் தாவா சொத்தின் அளவுகளே நிலையில் இல்லை என நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் மூலம் நிரூபணமாகி உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என அறிக்கையில் கண்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி மனுதாரர் தாக்கல் செய்த தாவாவிலிருந்து எதிர்மனுதாரர்களை நீக்கரவு செய்து, அவர்களை பொறுத்து தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும். எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) <u>1ம் உத்தேசதரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவின் 2ம் உத்தேசதரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, அப்பு என்பவர் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்தாக கேள்விகள் எழுப்பி இவ்வழக்கின் வாதி அப்பு மீது ஏற்கனவே தாக்கல் செய்த அ.வ.எண்.337/2015 ன் பிராது மற்றும் பதிலை ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் இறந்த அப்புவின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் வாதத்தின்படி தாவா சொத்தை யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று தெரியாமலேயே மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது நிருபணமாகிறது.

(ii) அ.வ.எண்.337/2015 என்ற வழக்கை நடத்தாமல் மனுதாரர் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு, பின்னிட்டு உரிய காலத்தில் வாரிசுகளை சேர்க்காமல் 1278 நாட்கள் காலதாமதத்துடன் மனுதாக்கல் செய்து, அம்மனு கடந்த 02.06.2023 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அப்புவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அப்புவின் வாரிசுகள்தான் அனுபவித்து வருகிறார்கள். இம்மனுவில் எதற்காக உத்தேச தரப்பினர்களை சேர்க்க வேண்டும்? என்பது குறித்தும், எந்த வகையில் உத்தேசதரப்பினர்கள் மனுதாருக்கு இடையூறு கொடுத்தனர்? என்பது குறித்தும், உத்தேச தரப்பினர்கள் வழக்கு சொத்துகளுடன் எந்த வகையில் தொடர்புடையவர்கள் என்பது குறித்தும் எந்த வாதுரையும் முன்வைக்காமல் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(iii) உண்மையில் இந்த தாவா சொத்திற்கும், அப்புவிற்கும் தொடர்பு இருந்திருந்தால் 2015 ம் ஆண்டு தனியாக வழக்கு தாக்கல் செய்யாமல், அன்றைய தேதியிலேயே மனுதாரர் அப்புவை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பார். வழக்கு தாக்கல் செய்து 10 ஆண்டுகள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்திருக்க மாட்டார். மேலும் 2013 ம் ஆண்டு முதல் வழக்கினை நடத்திவரும் மனுதாரர் மேற்சொன்ன வழக்கில் உத்தேச தரப்பினர்கள் குறித்து எந்தவிதமான காரணமும், வாதுரையும் கூறாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென உத்தேசதரப்பினர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. உத்தேச தரப்பினர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியால், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை, செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.07.2023ம் தேதியன்று வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, அப்பு மற்றும் அவரது குடும்பத்தினர் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்தாக பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கூறி, அ.வ.எண்.337/2015 என்ற வழக்கின் வழக்குரை, பதிலுரை ஆகியவற்றின் நகல் குறியீடு செய்யப்பட்டது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) மேற்படி அ.வ.எண்.337/2015 என்ற வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம், பிரிவு 5ன்கீழ் இந்நீதிமன்றத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், இந்நிலையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் அப்பு என்பவர் தான் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதால், இவ்வழக்கு நிலுவையில் மேற்படி அப்பு என்பவர் இறந்துவிட்டதால் இவ்வழக்கில் அவரது வாரிசுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரரால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) 1, 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துள்ளதாக கூறப்படும் தாவா சொத்தின் அளவுகளே நிலையில் இல்லை என நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் மூலம் நிரூபணமாகி உள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என அறிக்கையில் கண்டுள்ள நிலையிலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நாளது வரையில் மனுதாரர் எந்த ஆட்சேபணையும் தாக்கல் செய்யாத நிலையிலும், எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி மனுதாரர் தாக்கல் செய்த தாவாவிலிருந்து எதிர்மனுதாரர்களை நீக்கரவு செய்து, அவர்களை பொறுத்து தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும், அ.வ.எண்.337/2015 ன் தாவா சொத்துவிவரமும், இவ்வழக்கின் சொத்துவிவரமும், தாவா பரிகாரங்களும் ஒன்றே என்றும், வேண்டுமென்றே மனுதாரர் மேற்படி அ.வ.எண்.337/2015 என்ற வழக்கை நடத்தாமல் தவறுகைக்காக தள்ளுபடி ஆகுமாறு விட்டுவிட்டு தற்போது இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி அப்புவின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சி சேர்க்க வேண்டுமென கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) உத்தேசதரப்பினர்கள் தரப்பில் இம்மனுவில் எதற்காக உத்தேச தரப்பினர்களை சேர்க்க வேண்டும்? என்பது குறித்தும், எந்த வகையில் உத்தேசதரப்பினர்கள் மனுதாருக்கு இடையூறு கொடுத்தனர்? என்பது குறித்தும், உத்தேச தரப்பினர்கள் வழக்கு சொத்துகளுடன் எந்த வகையில் தொடர்புடையவர்கள் என்பது குறித்தும் எந்த வாதுரையும் முன்வைக்காமல் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், உண்மையில் இந்த தாவா சொத்திற்கும், அப்புவிற்கும் தொடர்பு இருந்திருந்தால் 2015 ம் ஆண்டு தனியாக வழக்கு தாக்கல் செய்யாமல், அன்றைய தேதியிலேயே மனுதாரர் அப்புவை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பார் என்றும், மேலும் 2013 ம் ஆண்டு முதல் வழக்கினை நடத்திவரும் மனுதாரர் மேற்சொன்ன வழக்கில் உத்தேச தரப்பினர்கள் குறித்து எந்தவிதமான காரணமும், வாதுரையும் கூறாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், ச.எண்.315/8 ல் தாவா சொத்தின் கிழபுறம் 7 அடி அகலம், 40 அடி நீளத்தில் தென்வடலாக அமைந்துள்ள தாவா தடவழியை 1, 2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரின் துணையோடு ஆக்கிரமித்து கட்டுமானங்கள் மேற்கொள்வதாகவும், அதனால் மேற்படி தாவா தடவழியின் பேரில் மனுதாரருக்குள்ள உரிமையை விளம்பக் கோரியும், மேற்கொண்டு எதிர்மனுதாரர்கள் தாவா தடவழியில் கட்டுமானங்கள் மேற்கொள்ளக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் தாவா தடவழியை ஆக்கிரமித்து எதிர்மனுதாரர்களால் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை அகற்ற வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், கடந்த 2013ம்வருடத்தில் மனுதாரர்/வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) அதேபோல் இவ்வழக்கில் விசாரணையின் போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது, ச.எண்.315/8 ல் அமைந்துள்ள மனுதாரரின் நிலத்திற்கு வடபுறத்தில் ச.எண்.315/10 ல் அப்பு என்பவரது நிலம் அமைந்துள்ளதாகவும், மேற்படி ச.எண்.315/8 ல் அமைந்துள்ள மனுதாரரின் நிலத்திற்கு வடபுறமாக, அதாவது மனுதாரரின் நிலத்திற்கும், ச.எண்.315/10 ல் அமைந்துள்ள மேற்படி அப்பு என்பவரது நிலத்திற்கும் இடையே 2 அடி அகலம், 31 அடி நீளத்தில் தென்வடலாக மனுதாரரால் ஒரு சந்து விடப்பட்டிருந்தது என்றும், அப்பு என்பவர் மேற்படி 2 அடி அகல சந்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததோடு மனுதாரரின் சொத்திற்கு கிழபுறமாக அமைந்துள்ள 7 அடி அகல தடவழியில் கழிவுநீர் குழாய் பதிக்க முயற்சிப்பதாகவும் கூறி மேற்படி அப்புவிற்கு எதிராக கடந்த 2015 ம் வருடத்தில் இதே நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(vii) மேற்கண்ட எ.ம.சா.ஆ.1 வழக்குரை சொத்துவிவரத்தையும், இவ்வழக்கின் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துவிவரத்தையும் ஒருங்கே பரிசீலனை

செய்கையில், மேற்படி இரு சொத்துவிவரங்களும் கிட்டத்தட்ட ஒன்று என்று தெளிவாகிறது. தாவா சொத்தின் கிழபுறத்திலுள்ள 7 அடி அகல தென்வடல் சந்தை ஆக்கிரமித்து சட்டத்திற்கு புறம்பாக கட்டுமானம் செய்துவிட்டதாக கூறி, இவ்வழக்கின் எதிர்மனுதாரர்கள் மீது தனி வழக்குமூலத்துடன் கடந்த 2013ம் வருடத்தில் ஒரு வழக்கையும், மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், தாவா சொத்தின் வடபுறத்திலுள்ள 2 அடி சந்தையும், தாவா சொத்தின் கிழபுறத்திலுள்ள மேற்படி 7 அடி தடவழியையும் ஆக்கிரமிக்க முயற்சிப்பதாக கூறி, புதிய வழக்குமூலத்துடன் மேற்படி அப்புவிற்கு எதிராக ஒரு தனி வழக்கையும் மனுதாரர் தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(viii) தரப்பினர்களது வாதுரைகளின் படியே மேற்படி அப்புவிற்கு எதிராக கடந்த 2015ம் வருடத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.337/2015 என்ற வழக்கு கடந்த 2021ம் வருடத்தில் இந்நீதிமன்றத்தால் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேற்கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கருத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், 2013ம் வருடத்தில் தாவா சொத்திற்கு கிழபுறத்தில் அமைந்துள்ள 7 அடி சந்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்து, நிலுவையில் உள்ள நிலையில், அப்பு என்பவர் மேற்படி 7 அடி அகல சந்தில் கழிவுநீர் குழாய் பதித்து அதை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்திருந்தால், மனுதாரர் மேற்படி அப்புவை இவ்வழக்கிலேயே கூடுதல் பிரதிவாதியாக சேர்த்து அவருக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கின் வழக்குரையில் புதிய திருத்தங்கள் செய்திருக்க வேண்டும் என்பதே ஆகும்.

(ix) மேலும் மேற்படி அ.வ.எண்.337/2015 என்ற வழக்கில் தாவா சொத்தின் வடபுறத்தில் உள்ள 2 அடி சந்தையும், கிழபுறத்திலுள்ள 7 அடி அகல சந்தையும் ஆக்கிரமிக்க முயற்சிப்பதாக கூறி, மேற்படி அப்புவின் மீது ஒரு தனி வழக்குமூலத்தை குறிப்பிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, அதை தவறுகைக்காக தள்ளுபடிக்கு விட்டுவிட்டு, தற்போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது நீதின்ற ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் மேற்படி அப்புவும், அவரது குடும்பத்தினரும் தான் தாவா சொத்தை ஆக்கிரமித்துள்ளதாக கேள்விகள் எழுப்பப்பட்டதாலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் அவ்வாறே குறிப்பிட்டுள்ளதாலும், மேற்படி அப்பு தற்போது இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென மனுதாரர் முன் வைக்கும் காரணம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) ஏனெனில், மேற்படி அ.வ.எண்.337/2015 என்ற வழக்கில், மேற்படி அப்பு தாவா சொத்தின் கிழபுறத்திலுள்ள 7அடி அகல சந்தில் கழிவுநீர் குழாய் அமைக்க முயற்சித்தார் என்பதே மனுதாரரின் வாதமாகும். அதாவது மேற்படி வழக்கில் அப்பு என்பவர் மேற்படி 7அடி அகல சந்தில் கட்டுமானங்கள் செய்ய முயற்சித்தார் என்பதோ, அல்லது ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் செய்துள்ளார் என்பதோ மனுதாரரின் வாதமல்ல. மேலும் தற்போது இம்மனு பிரமாணப்பத்திரிக்கையிலும் கூட, எந்த இடத்திலும் இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில், மேற்படி அப்பு 7அடி அகல சந்தில் ஆக்கிமிப்பு செய்து கட்டுமானங்கள் செய்துவிட்டதாக மனுதாரரால் குறிப்பிடப்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

(xi) கடந்த 2013ம் வருடத்திலேயே தாவா சொத்தின் கிழபுறத்திலுள்ள 7அடி அகல தென்வடல் சந்தை ஆக்கிரமித்து 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கட்டுமானங்கள் செய்துள்ளதாக கூறி ஒரு வழக்குமூலத்தை முன்னிறுத்தி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வரும் நிலையில், தற்போது உத்தேச தரப்பினர்கள் தான் மேற்படி 7அடி அகல தென்வடல் சந்தை ஆக்கிரமித்து கட்டுமானம் செய்துள்ளதாக கூறி, அதே வழக்கின் பின்னிட்ட நிலையில், ஒரு புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கவோ, முந்தைய வழக்குமூலத்துடன் இணைக்கவோ இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) அவ்வாறு கடந்த 2013ம் வருடத்திலேயே தாவா சொத்தின் கிழபுறத்திலுள்ள 7அடி

அகல தென்வடல் சந்தை ஆக்கிரமித்து கட்டுமானங்கள் செய்துள்ளதாக கூறி, 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒரு வழக்குமூலத்தை முன்னிறுத்தி, இவ்வழக்கை தாக்கல் செய்து நடத்தி வரும் நிலையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், **"மேற்கு புறம் தென்வடல் 1.2 மீட்டர், கிழபுறம் 0.00 மீட்டர் செங்கோண முக்கோணமாக ச.எண்.315/10A ல் வீடு கட்டியுள்ள பட்டாதாரர் ஆக்கிரமித்துள்ளதாக கருதுகிறேன்."** என தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஒரே காரணத்தின் அடிப்படையில், மேற்படி அப்புவின் வாரிசுதாரர்களுக்கு எதிராக எவ்வித அடிப்படை வாதுரைகளையும், வழக்குமூலத்தையும் குறிப்பிடாமல், நிலுவையில் உள்ள இவ்வழக்கில் மேற்படி அப்புவின் வாரிசுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களை, பிரதிவாதிகளாக சேர்க்க கோரும் இம்மனு ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) கற்றறிந்த 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையிலிருந்தே 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பது தெரியவரும் நிலையில், மேற்படி எதிர்மனுதாரர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கரவு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேற்பண்ட வாதத்தை பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கருத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், ஒரு வழக்கு விசாரணையில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்படும் அறிக்கை என்பது மேற்படி ஆணையரின் கருத்துரையே அன்றி அது நிலைமுறை சான்றோ (Substantive proof) அல்லது அறுதியான சான்றோ (Conclusive proof) அல்ல என்பதும், மேற்படி கருத்துரையானது வழக்கின் இதர சாட்சிய மற்றும் சான்றாவணங்களுடன் ஒத்துரைத்து செய்யும் சாட்சியமே (Corroborative evidence) ஆகும்.

(xiv) மேற்கண்ட இந்நீதிமன்றத்தின் கருத்துரைக்கு வழிகாட்டும் விதமாக, மாண்பமை உச்சநீதிமன்றத்தால், ***"2023 INSC 702, Committee of Management Anjuman Intezamia Masajid, Varanasi vs. Rakhi Singh and others"*** என்ற வழக்கில், பத்தி 14 ல் ***"... The evidentiary value of any report of the commissioner is a matter to be tested in the suit***

***and is open to objections including cross-examination. A report of the commissioner does not by and of itself amount to a substantive finding on matters in dispute and is subject to the process of the court during the course of the trial..."*** என தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் விசாரணை துவங்கப்பட்டு நடைபெற்று வரும் நிலையிலும், எதிர்மனுதாரர்களும் மனுதாரர் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து எதிர்வழக்காடி வரும் நிலையிலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை அடிப்படையாக கொண்டு மட்டுமே 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கறவு செய்ய கோருவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xv) மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில், இறந்த அப்புவின் வாரிசுதாரர்களான உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தகுதிப்பாடற்றது என கருதி, இம்மனுவை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.09.02 15:11:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் சான்றாவணங்கள்:—</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | அ.வ.எண்.337/2015 ன் வழக்குரை | நீதிமன்றத்தில் பெறப்பட்ட சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | அ.வ.எண்.337/2015 ன் பதிலுரை | நீதிமன்றத்தில் பெறப்பட்ட சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 02.06.2023 இ.ம.எண்.02/2022 ன் தீர்ப்பாணை உத்தரவு, சீரான உத்தரவு | நீதிமன்றத்தில் பெறப்பட்ட சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 02.06.2023 இ.ம.எண்.03/2022 ன் தீர்ப்பாணை உத்தரவு, சீரான உத்தரவு | நீதிமன்றத்தில் பெறப்பட்ட சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 02.06.2023 இ.ம.எண்.04/2022 ன் தீர்ப்பாணை உத்தரவு, வரைவு உத்தரவு | நீதிமன்றத்தில் பெறப்பட்ட சான்றிட்ட நகல் |

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.09.02 15:11:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.